www.Padasalai.Net www.TrbTnpsc.com

HMD

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

II – ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14 X 1 = 14

1. பாயிரம் இல்லது ......... அன்றே அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
3. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி. எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிற போது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைவிட திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது
ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது
4. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் பொய்க்காது
5. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழி பெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பின் தந்தை
6. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
ஆ) வினைத்தொகை, இடவாகு பெயர் இ) வினையெச்சம், வினைத் தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
7. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
அ) கனி முன் நிரை ஆ) காய் முன் நேர் இ) காய் முன் நிரை ஈ) மாமுன் நேர்
8. மண்ணுக்கு வளம் சேர்ப்பன எவை? அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
9. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் - யார், யாரிடம் கூறியது? அ) அமைச்சர் கவிஞரிடம்
ஆ) அமைச்சர் மன்னரிடம் இ) மன்னர் அமைச்சரிடம் ஈ) மன்னர் அழுதவல்லியிடம்
10. "யாரே உனைப்போல் அனுதினமும் உழைப்போர்" - இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
11. காப்பிய இலக்கணம் முழுவதுமாய் நிரம்பிய நாடக நூல் (தமிழின் முதல் பா வடிவ நூல்)
அ) திருக்குறள் ஆ) மணிமேகலை இ) மனோன்மணீயம் ஈ) நீலகேசி
12. உலக சிட்டுக்குருவிகள் நாள் அ) மார்ச் 02 ஆ) ஏப்ரல் 02 இ) மார்ச் 20 ஈ) ஏப்ரல் 20
13. யானை டாக்டர் என்னும் சிறுகதை எந்த சிறுகதை தொகுப்பில் உள்ளது?
அ) அறம் ஆ) அழைப்பு இ) கனிவு ஈ) கிழித்த கோடு
14. அடையாறுப் பாலத்தின் சுற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.
அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
இ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

### பகுதி - II ( பிரிவு - 1)

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
16. காற்றின் திறாத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?
17. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. "கற்றேன் என்பாய் கற்றாயா" என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
21. கோட்டை எனும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

**பிரிவு - 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** 1) காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
2) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராம போவாது.
23. **பிறமொழிச் சொற்களைத் தமிழ்படுத்துக.** 1) Debate 2) Journalist
24. ***தொடர் அமைத்து எழுதுக.*** அன்றொருநாள், நிழலிலிருந்து.
25. **வேர்ச் சொற்களை தொடர்களாக மாற்றுக.** 1) ஓடு 2) பாடு
26. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
27. **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.** அ) மாநிலக் கல்லூரி ஆ) உழுதுழுது
28. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
29. **இணையான தமிழ்ச்சொல் தருக.** அ) விசா (Visa) ஆ) பாஸ்போர்ட் (Passport)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

30. பொருத்துக.

| | |
|---|---|
| அ) தொல்காப்பியம் - | சங்க நூல் |
| ஆ) திருக்குறள் - | பக்தி நூல் |
| இ) புறநானூறு - | அறநூல் |
| ஈ) திருவாசகம் - | இலக்கண நூல் |

**பகுதி - III பிரிவு - 1** 2 X 4 = 8

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.**

31. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
32. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
33. சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
34. ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. 2 X 4 = 8

**பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.**

35. வேதிக்கலப்பில்லா பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை? 3 X 4 = 12

**பிரிவு - 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை எழுதுக.**

39. அ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. ***(அல்லது)***
ஆ) சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.
40. ***இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்தினை எழுதி எவையேனும் மூன்று நயங்கள் எழுதுக)***

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்* - பாரதியார்

41. பாலைத் திணை. (அல்லது) பொருண்மொழிக் காஞ்சி துறையை விளக்குக.
42. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். ***(அல்லது)***
சிறுதுரும்பும் பல்குத்த உதவும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
43. **தமிழாக்கம் தருக.**
1) Education is the most powerful weapon, which you can use to change the world.
2) Looking at beauty in the world Is the first step of purifying the mind.
3) Culture does not make people, people make culture.
4) A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

**காது கேளாதோர்க்கான வினா.**

"தமிழ்" என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்" ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' - என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.
"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" - என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' என்னும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப் புலமை' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்ற விடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் இழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.
ஞானசம்பந்தன் தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே' மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள் :** 1) தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2) பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக. 3) தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக. 4) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

**பகுதி - IV** 3 X 6 = 18

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

44. அ) மதினா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்த எழுதுக. ***(அல்லது)*** ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும், வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க
45. அ) பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க. ***(அல்லது)*** ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள்?
46. அ) கல்லும் கதை சொல்லும் – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. **(அல்லது)** ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

**பகுதி - V** 4 + 2 = 6

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**
அ) 'உண்டால் அம்ம' - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுது.
ஆ) "உணின்" என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com